www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

திட்டத்தேர்வு----1 (இயல்-1)

மதிப்பெண்கள்:50

வகுப்பு: 12

10×1=10

I. உரிய விடையைத் தேர்ந்தெடுக்க.

1) இலக்கியத்தையும்,மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல் ----

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2) மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது ---------
தன்னேர் இலாத தமிழ்---இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள தொடைநயம்

அ)அடிமோனை, அடி எதுகை ஆ)சீர் மோனை, சீர் எதுகை

இ. அடி எதுகை,சீர் மோனை ஈ)சீர் எதுகை, அடிமோனை

3) கருத்து--1:இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு

கருத்து--2:தொடரமைப்பு சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது

அ)கருத்து 1 சரி ஆ)கருத்து 2 சரி

இ)இரண்டு கருத்தும் சரி ஈ)கருத்து 1 சரி 2 தவறு

4) உயிர்மெய்க் குறில்கள் மொத்தம் எத்தனை ?

அ)90 ஆ)216 இ)247 ஈ)12

5) வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் ----------------

அ)பாரதியார் ஆ)சிற்பி இ) கி. ரா

ஈ)நெல்லைப்பர்

6) பாரதி வாழ்த்து, உய்யும் வழி என்ற கவிதை நூல்களை எழுதியவர் ---------
-

அ)சிற்பி ஆ)தண்டி

இ)பாரதியார் ஈ)நெல்லைப்பர்

7) -------- என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது தண்டியலங்காரம்

அ)காவ்யதர்சம் ஆ)பொதுவியல் இ)பொருளியல் ஈ)சொல்லணியல்

8) சிற்பி பாலசுப்பிரமணியத்திற்கு சாகத்திய அகாடமி விருது பெற்றுத் தந்த நூல்

அ) ஒரு கிராமத்து நதி ஆ) ஒளிப்பறவை இ) சர்ப்ப யாகம் ஈ) சூரிய நிழல்

9)' நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை' எனக் கூறிய நூல் -------------

அ) புறநானூறு ஆ)நற்றினை இ)குறுந்தொகை ஈ)அகநானூறு

10) வியர்வை வெள்ளம்----இலக்கணக்குறிப்பு

அ) உவமை ஆ)உருவகம் இ)உம்மைத்தொகை

ஈ)வினைத்தொகை

II. கீழ்க்கண்ட வினாக்களில் ஐந்தனுக்கு மட்டும் விடைதருக. 5×2=10

11) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக

12) கவிஞர் சிற்பி எவற்றைவியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

13) விடியல், வனப்பு இரு தொடர்களையும் ஒருங்கிணைக்கும் தொடரமைக்க .

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

14) உயர்ந்தோர்----பகுபத உறுப்பிலக்கணம் தருக
15) சிற்பி பாலசுப்பிரமணியன் இயற்றிய நூல்கள் யாவை?
16) எழுதும் போது ஏற்படும் பிழைகள் யாவை?

III. மொழிப்பயிற்சி வினாக்களுக்கு விடை தருக. 6×2=12

17) முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம்---பொருள் அறிந்து தொடரமைக்க
18) பொருள் வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைக்க
அ)குரை--குறை (அல்லது) வளம்--வலம்
19) மயங்கொலி எழுத்துகள் யாவை?
20) தமிழாக்கம் தருக:
A new language is a new life
21) குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழ் அறிஞர்களைக் கண்டுபிடி
(புதுமைப்பித்தன், தமிழ் ஒளி, கோதை)
அ) தாய்மொழி:ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும்---
ஆ) சிறுகதை ஆசிரியர்;முதல் பாதி நவீனம்--
22) கலைச்சொல் தருக:
அ)archive ஆ)fiction

அடிமாறாமல் எழுதுக; 1×4=4

23) "ஓங்கலிடை"----எனத்தொடங்கும் பாடலை எழுதுக

IV. கீழ்க்கண்ட வினாக்களுள் இரண்டினுக்கு மட்டும் விடைதருக. 2×4=8

24) பொருள் வேற்றுமையணி என்றால் என்ன? சான்று தருக
25) ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்::இடம் சுட்டிப்பொருள் விளக்கம் தருக
26) சங்கப் பாடல்களின் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்---விளக்குக.

V. விரிவான விடை தருக.

1×6=6

27) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக

அல்லது

28) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விளக்குக

www.Padasalai.Net